International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

சங்க இலக்கிய ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பலும் கலைஞர்களின் வாழ்வியலும்

சி. கல்பனாதேவி
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
முனைவர் பொ. செந்தில்குமார்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரியார் பல்கலைக்கழகம்
பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி - 636 905

ஆய்வுச்சுருக்கம்

பன்னெடுங்காலமாக தொன்மங்கள் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் மரபுத் தொடர்களாக மக்களின் வாழ்க்கை முழுவதும் தொன்று தொட்டு வழங்கி வந்துள்ளன.

சங்க காலத் தமிழர் களவு, கற்பு, போர், வீரம், கொடை, விருந்தோம்பல் இவற்றை பண்பாடாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். சங்க இலக்கியங்களான ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பாடு, கலைமாந்தர்களின் பண்பாடு எவ்வாறு தொன்மங்களாக சமூகப்பண்பாட்டு பின்னனியில் காட்சிப்படுத்தப்படுகிறது என்பதை எடுத்துரைப்பியல் நோக்கில் ஆராயப்பட்டுள்ளது. கரிகால் பெருவளத்தான், நல்லியக்கோடன் போன்றவர்களின் வள்ளல் தன்மையையும் விருந்தோம்பும் முறையும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் புலமை மதிக்கப்பட்டதால் புலவர்கள் பெருகினர். பாணர், பாடினியர், கூத்தர், விறலியர், பொருநர் போன்றவர்களின் வறுமையையும் வாழ்க்கையையும் மன்னனே கலைஞர்களை போற்றும் அளவிற்குத் திறன் படைத்தவர்களாகவும் விளங்கிய பழஞ்செய்திகளை தொன்மங்களாக எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதன்மைச் சொற்கள

கேளிர்-உறவினர், நண்பர்; அறுவை - ஆடை, துணி; மடவோர் - மகளிர்; ஊழ் - விதி; உரு-வடிவம், அச்சம்; கச்சை - கயிறு, கவழம்; யாக்கை - உடல், தேகம்; அரவு – பம்பு.

முன்னுரை

தொன்மம் என்பது பழங்கதை புராணம் என்ற பொருள் உடையது. காலங்காலமாக உருவாக்கப்பட்டு இறுகி விட்ட கருத்து வடிவங்களும் தொன்மம் எனலாம். இவ்வாறான தொன்மக் கதைகள் சங்க இலக்கியத்தில் முழுதும் பரவிக்கிடக்கின்றது. குறிப்பாக ஆற்றுப் படை நூல்களில் தொன்மக் கருத்துகள் புனைந்துரைக்கப்பட்டுள்ளதை விளக்கமறை திறனாய்வு நோக்கில் அணுகப்பட்டுள்ளது. அவற்றோடு வரலாற்று திறனய்வு பின்னனியில்; சங்க இலக்கிய பாணர், பாடினியர், விறலியர் போன்றோர் வரலாற்று நிகழ்வும் விளக்கப் படுகிறது. மேலும் தொன்மங்கள் மக்களின் மனங்களிலும் வாழ்க்கைமுறைகளிலும் பின்னிப் பிணைந்துள்ளதை இக்கட்டுரை வழி அறியலாம்.

தொன்மம் (பொருள்)

தொன்மம் வாய்ந்த பழங்கதைகளை விவரித்துக் கூறுவது தொன்மம். இதனைப் புராணம், மான்மியம் என்னும் சொற்களில் வழங்கி வந்தனர். டாக்டர் கா.மீனாட்சி சுந்தரனார் ஆலவா என்றும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தொன்மம் என்னும் சொல்லைக் குறிப்பிடுகிறார்.

சில தொன்மங்கள் சமய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் மையமாகக்கொண்டு விளங்குகின்றன.

ஆற்றுப்படை நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சியில் ஆற்றுப்படை இலக்கியங்கள் தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாட்டுக்குரிய தனித்துவ மாகும். வாழ்க்கையின் பல்வேறுபட்ட கூறுகளைப் காட்சிப்படுத்திக் காட்டுகின்ற 'காலக் கண்ணாடியாக' விளங்குகின்றன. குறிப்பாக வீரம், காதல், கொடைச்சிறப்பு, களவு, நிலையாமை போன்ற கூறுகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றமை அவற்றின் சிறப்பம்சமாகும்.

ஆற்றுப்படை என்பதன் பொருள் வழிப்படுத்த லாகும். அதாவது செல்வந்தனிடம் பரிசில் பெற்று வரும் கூத்தர், பாணர், பொருநர், விறலி, போன்றோர் வழியிடையே தம்மை எதிர்ப்பட்ட இரவலர்களது துயரைக்கண்டு நின்னைப் போலவே யானும் இருந்தேன் என இரவலனின் நிலை கண்டு இரங்கித் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை அவர்களும் பெற்று மகிழும்படி வழிப்படுத்துதலேயாகும்.

பண்பாடு

"பண்பாடு" என்ற சொல் பண்பாடு என்ற கூட்டு வினைச்சொல்லிலிருந்து உருவானா தாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும். ஆதிகாலத்தில் குகைகளில் வைத்ததே பண்பாடுதான் பண்பாடு என்ற சொல் பண்படுதல் என்ற சொல்லில் இருந்து தோன்றியது. உலகில் தோன்றிய ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு விதமான பண்பாடு உள்ளது.

ஆற்றுப்படை இலக்கியத்தில் பண்பாட்டு தொன்மங்கள்

விருந்தோம்பல் பண்பாடு

விருந்து என்பது புதுமை. புதிதாக வந்தவரை விருந்தினர் என்கிறோம். புதுமையாக செய்யப்பட்ட யாப்பை விருந்து என்கிறோம் என்பதனை

விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே[1] (தொல் - செய்யுள் - 231)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

உறவினரும் நண்பரும் அல்லாதவரை புதியவராக நம்மிடம் வரும் மக்களை விருந்தினர் என்றனர்.

பொருநராற்றுப்படை

கரிகால் பெருவளத்தான் எளியவரையும் நட்புடன் விரும்பி விருந்தோம்பும் பண்பாளன்.

ஒருவருக்கு சிலவற்றை கொடுப்பதைக் காட்டிலும் அணுகும் முறையும், நடந்து கொள்ளும் விதமும் அவர்களைப் பற்றிய எண்ணத்தை மனதில் உயர்ந்த இடத்தில் கொண்டு செல்லும். அவ்வகையில் கரிகால் பெருவளத்தானின் செயல்பாடு அவனைப் பற்றி நன்மதிப்பை மனதில் எழச் செய்கிறது.

கேளிர் போலக் கோள் கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி
கண்ணில் காண நண்ணு வழி இரஇப்
பருகு அன்ன அருகா நோக்கமோடு
உருகுபவை பேல் என்பு குளிர் கொள்

(பொருநரா -74-78)

என்ற அடிகளின்வழி கரிகாலன் பொருநனை அணுகிய விதத்தை அறியலாகிறது. அருகில் அமர செய்து அன்புடன் பார்த்த முறையை உணரமுடிகிறது. பொருநன் தனக்குக் கிடைத்த மரியாதையை மகிழ்ச்சியுடன் கூறுகிறான். கரிகால் பெருவளத்தானின் பெருஞ்சிறப்பும் உயர்ந்த பண்பும் இதன் வழி அறியலாகிறது.

கரிகாலன் உணவு முதலியவை தந்து பேணிய முறையைப் பொருநன் எடுத்துரைக் கின்றான். தக்க காலத்தை உணர்ந்து எம்மை அழைத்து சூடாக செய்த இறைச்சி யாகிய பெருந்தசைத் துண்டங்களைப் பலமுறை உண்ணுங்கள் என்று எம்மை வற்புறுத்தித் தந்தனன். அவற்றின் வெப்பத்தை ஆற்றுதற் பொருட்டு வாயின் இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் மாற்றி மாற்றிச் சேர்த்துத் தின்று இனி இவை

எமக்கு வேண்டாம் என்று கூறுகையில் இனிய சுவையை உடைய பணியாரங்களைக் கொணர்ந்து தந்து அவற்றை உண்ணச் செய்தனர்.

---------- பதன் அறிந்து

துரா அம் துற்றிய துருவை அம் புழுக்கின்
புரா அரை வவை பருகு எனத் தண்டிக்
காழின் கட்ட கோழ் ஊண் கொழுங் குறை
ஊழின் ஊழின் வாய் வெய்து ஒற்றி
ஆவை அவை எனிவரும் எனினே சுவையே
வேறுபல் உருவின் விரகு தந்து இரீஇ[3]
(பொருந-102-108)

என பொருநற் கரிகாலனின் சிறப்பைக் கூறுகிறான்.

புதிதாக ஈன்ற பசு தன் கன்றினைக் கனிவுடன் நோக்குதல் போல விருந்தினரை நோக்கி அன்புடன் வரவேற்க வேண்டும். இதனை

ஈற்றஆ விருப்பின் போற்றுபு நோக்கி[4]
(பொரு-15)

என்று பொருநராற்றுப்படை கூறும்.

தமிழரின் பாரம்பரியப் பண்புகளுள் ஒன்றாகத் திகழக்கூடிய விருந்தோம்பலில் செய்யக்கூடிய முறைகளை மிகச்சரியாக செய்தவன் கரிகாலன். விருந்தினர்கள் விடைப்பெற்றுச் செல்லும்போது அவர்கள் பின்னே ஏழடி நடந்து சென்று வழியனுப்பி வைப்பார்கள். கரிகாலன் தன்மை நாடி வந்த பொருநர்களை வரவேற்று உபசரித்து அவர்கள் விடைபெறும் போது ஏழடி தூரம் நடந்துச்சென்று வழியனுப்பியதை

காலின்ஏழ் அடிப் பின் சென்று கோல் இன்[5]
(பொருநை – 16)

என்ற அடியின் மூலம் அறியலாம்.

சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பலின் சிறப்பு

மன்னன் நல்லியக்கோடனின் தலைச்சிறந்த பண்புகளையும் வீரத்தையும் வள்ளல் தன்மையும் விருந்தோம்பும் முறைமையும் இந்நூலில் காணமுடிகிறது.

நல்லியக்கோடனை யார் காணச் சென்றாலும் அவர்கள் மூங்கில் உட்பட்டையை உரித்தாற் போன்ற ஆடையை உடுத்துதற்குத் தருவான். சமையல் கலையில் சிறந்த வீரன் எழுதிய சமையல் நூலினைக் கொண்டு சமைக்கப் பெற்ற அரியவகை உணவுகளை வழங்கு வான். சூரியனைப் போன்ற பொற்கிண்ணத் தில் உணவை வைத்துப் பரிமாறி தான அருகில் இருந்து உண்ணச் செய்வதை,

காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇப்
பாம்பு வெகுண்டன்ன தேறல்நல்கீக்
கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்
பூ விரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்[6]
(சிறு–236-241)

என்ற அடிகளின்வழி அறிய முடிகின்றது.

வள்ளலை நாடி நடந்து வரும் வழியில் சிற்றூர்களில் வாழும் எளிய மக்கள் தங்கள் நிலத்திற்க்குக் கிடைக்கும் உணவு வகை களில் மேன்மையானவற்றை இரவலர்க்கு அளித்து விருந்தோம்பியதை,

எயிற்றயர் சுட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில் வளை ஆயமொடு
ஆமான் சூட்டின அமைவரப் பெறுகுவீ[7]
(சிறு-175-177)

என்கிறது. நல்லியக்கோடனின் நாட்டினுள் அடி எடுத்து வைத்தாலே போதும் நம் வறுமை நீங்கிவிடும். அவனது குடிமக்களும் விருந்தோம்பும் பண்பு மிக்க வள்ளல்களாக உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கலைமாந்தர்கள் பண்பாடு

சங்க இலக்கியத்தில் கலைஞர்கள்

சங்க காலத் தமிழகத்தில் புலமை மதிக்கப் பட்டதால் புலவர்கள் பெருகினர். புலவர்களின் புகழ்ச்சியை மன்னர்கள் விரும்பியமையால் அவர்களை மையமாகக் கொண்டு பல பாடல்கள் புனையப்பட்டன. முன்னோர்களின் வீரமும் காதலும் ஈகைப்பண்பும் புலவர்களின் பாடல்களுக்குக் கருக்களாயின. அதன் காரணமாகவே சங்கப்பாடல்கள் வீரம், ஈகை, காதல் குறித்த பாடல்களாக விளங்கின.

ஆற்றுப்படை இலக்கியத்தில் கலைஞர்கள்

மன்னர்கள் புலவர்களை பெருமையுடன்

போற்றினர். அரசியல் திட்டங்கள் வகுக்கும் போது புலவர்களின் கருத்துக்களையும் அறிவுரைகளையும் ஏற்றனர். தமது ஆட்சிச் சிறப்பினைப் புலவர்கள் புகழ்ந்து பாடுதல் பெறுதற்குரிய பெரும் பேறெனக் கருதினர். கல்வி பொதுவுடைமையாக இருந்ததால் புலவர்களும் ஒரு குறிப்பிட்ட இனத்தவராக இல்லாமல் சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு இனத்தையும் சார்ந்தவராக இருந்தனர்.

ஆற்றுப்படை இலக்கியங்கள் கலைஞர்கள் வள்ளல்களைப் புகழ்ந்துப்பாடி பெருஞ் செல்வதைப் பரிசாகப் பெறுதலைக் கருவாகக் கொண்டவை. வள்ளல்களின் புகழாசையையும், கலைஞர்களின் வறுமையையும் பெரிதும் விவரிப்பன ஆற்றுப்படை இலக்கியங்களாகும்.

பாணர்

பாணர் இசைக்கலையில் வல்லுநர். பல நரம்புகளை உடைய பெரிய யாழை இசைத்துப் பாடுபவர் 'பெரும்பாணர்' எனப் பட்டனர். சிறிய யாழை இசைத்தப் பாடுபவர் சிறுபாணர் எனப்பட்டனர். இப்பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று பாடி பரிசில் பெற்றனர். வறுமை அவனை வாட்டும்போது அவன் பெற்ற கல்வியை இகழ்ந்துப் பேசுவதாய் பெரும்பாணாற்றுப்படை

கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து
திரிதரும்
புல்லென யாக்கைப் புலவுவாய்ப் பாண[8]
(பெரு)

எனக் குறிப்பிடுகிறது.

பாடினியர்

இசையில் வல்ல மகளிர் பாடினியர் எனப் பட்டனர். பொருநராற்றுப்படையில் கரிகாலனிடம் பரிசில் பெறச் சென்ற பாடியினின் தோற்றம் விளக்கப்பட்டுள்ளது.

அதனை,

அறல் போல் கூந்தல், மிறைபோல்
சிறுநுதல்
கொலைவில் புருவத்து, கொழுங்கடை
மழைக்கண்,——
பேடை மயில்உருவின்பெருந்தடு பாடினி[9]
(பொரு)

என்னும் அடிகளால் அறியலாம்.

கூத்தர்

பல இசைக்கருவிகளை இசைத்து நடனம் ஆடுபவர்கள் கூத்தர்கள். கூத்துக்கலைப் பற்றிய நூல்களைக் கற்று தேர்ந்தவர்களாக கூத்தர்கள் இருந்தனர். சிறுபாணாற்றுப் படையில் ஒய்மா நாடடை நல்லியக்கோடான் கூத்தரைப் புகழ்ந்தப் பாடியுள்ளான்.

இதனை,

பல்இயக் கோடியர் புரவலன் பேர்இசை[10]
(சிறு)

என்னும் அடியால் அறியலாம். மன்னர்கள் புகழந்து பாடும் அளவிற்கு கூத்துக் கலைஞர்கள் சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

விறலியர்

நடனக்கலையில் தேர்ச்சிப் பெற்றவள் விறலி. அவள் பொருநருடனும், பாணருடனும், கூத்தருடனும் சென்று தன் கலைத்திறனை வள்ளல்கள் மத்தியில் ஆடிக்காட்டிப் பரிசில் பெறுவர்.

மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்[11]
(சிறு)

பொருநர்

பொருநர் என்பவர் ஏர்களத்தும் போர்களத்தும் சென்று பாடும் கூத்தராவர் அவர்கள் இசைக் கருவிகளை இசைத்துப் பாடினர். விழா நடக்கும் ஊர்களில் தங்கள் இசை திறனைக் காட்டி விழா முடிந்தவுடன் தங்கள் ஊர்களுக்குச் செல்வது பொருநரின் வழக்கமாகும்.

இதனை,

அறாஅ யாணர் அகன்தலைப் பேர்ஊர்
சாறுகழி விழிநாள் சோறுநசை ஊறாஅது
வேறுபுலம் முன்னிய விரருஅறி பொருந[12]
(பொரு)

என்னும் பொருநராற்றுப்படை அடிகளால் அறியலாம்.

கலைஞர்களின் வாழ்க்கை முறை

அறிவு சார்ந்த சமூகமாக வாழ்ந்த புலவர்களின் வாழ்க்கை வளமையானதாக அமைய வில்லை. வறுமையில் உழன்று புலவர்கள். அரசர்கள் வள்ளல்களிடம் சென்று அவர்

களின் கொடைத்தன்மையைப் பாராட்டி தம்சுற்றத்தார், மனைவி மக்களின் துன்பத்தை எடுத்துரைத்து அதனை நீக்குமாறு பாடியுள் ளனர். பாணனும் அவன் மனைவி விறலியும் காடும் மலையும் கடந்து சென்று, வள்ளல் களைக் கண்டு அவர்களைப் புகழ்ந்து பாணன் இசைக்கருவிகளை இசைத்து பாட விறலி அதற்கேற்ப நடனமாடி வள்ளல்களிடமிருந்து பரிசில் பெற்று வாழ்க்கையை நடத்தினர்.

கணவனும் மனைவியும் ஒற்றுமையாய் இருந்து விழாக்களிலும் தம் கலைத் திறனைக் காட்டி பொருள் பெற்றனர். இல்வாழ்க்கை நேரிய முறையில் நடை பெற்றதால் கலைகள் சங்க காலத்தில் நன்கு வளர்ச்சிப்பெற்றன.

கரிகாலன் தன்னைப் பாடிவந்த பொருநர்க்கு இழை போனவழி இது என்று காணவியலாத நுண்மையுடைய வேலைப்பாடு நிறைந்த பாம்பின் தோலை ஒத்த ஆடையை நல்கினான் என பொருநராற்றுப்படை குறிப் பிடுகிறது.

இதனை,

நேர்க்குறுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து[12]

என்னும் அடிகளால் அறியலாம்.

நன்னனைக் காணச் சென்ற கூத்தருடன் இருந்த விறலியர் தாங்கள் அணிந்திரந்த அணிகலனின் தன்மையால் இலங்குவளை விறலியர் என அழைக்கப்பட்டனர். இவ்விறலியர் தம் கைகளில் வளைகளையும் தொடியையும் அணிந்திருந்தனர்.

இதனை,

இலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்[14]
(மலை)

என்னும் மலைபடுகடாம் அடியால் அறியலாம்.

கலைஞர்களின் வறுமை நிலை

பண்டைக்காலத்தில் கலைஞர்கள் வறுமை யின் கொடுமையில் சிக்கித் தவித்துள்ளனர். புலவர்கள் பசியை பகை என்றும், நோய் என்றும் துயரம் என்றும் பல பெயர்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வறுமையை போக்கிய வள்ளல்களையும், அரசர்களையும், மருத்துவன், அருளாளன், மழை போன்றவன் தெப்பம் போன்றவன் என்றும் போற்றியுள்ளமையால் புலவர்களின் வறுமைத் துன்பத்தை அறியமுடிகிறது. சிறுபாணாற்றுப்படையில் வறியவணான திணை வாசிப்பன் அவன் மனைவி பசியால் வருந்துகின்றனர். சுமைக்க உணவுப் பொருட்கள் இல்லை. ஆதனால் அவள் குப்பைக்கீரையை தன் நகங்களால் கிள்ளினாள். வீட்டில் உப்பின்மையால் அதை உப்பின்றி வேக வைத்தாள். அதை தாங்கள் உண்பதை வெளியார் பார்த்தால் இழிவாகக் கருதுவர் என்ற எண்ணத்தால் வீட்டுக் கதவை தாழிட்டாள். பின்பு தன் வீட்டாருடன் தானும் இரந்து உண்டாள் எனக் குறிப்பிடுகிறது.

இதனை,

“வளைக்கை, கிளைமகள் வள்உகிர்க் குறைத்த

குப்பை வேலை உப்புகிலி வெந்ததை

மடவோர் காட்சி நாணி, கடை அடைத்து,

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஉடன் மிசையும்[15] (சிறு)

என்னும் அடிகளால் அறியலாம்.

கலைஞர்களை மன்னர்கள் பேனுதல்

தமிழகத்தை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை வேந்தரும் பாரி, காரி, அதிகன் போன்ற சிற்றரசர்களும் தம்மை நாடிவந்த இயற்றமிழில் வல்ல பாணரையும், நாடகத்தமிழில் வல்ல கூத்தரை யும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். அருகிலிருந்து உணவுஅளித்தனர். உயர்ந்த ஆடைகளை வழங்கினர். அரண்மை்யிலேயே பல நாட்கள் இருக்கச் செய்தனர். இறுதியில் வேண்டிய பரிசிலை நல்கி பிரியா விடையளித்தனர்.

ஒய்மா நாட்டை ஆண்ட நல்லியக்கோடனது அரண்மனை வாயில் புலவர்க்கும், பொருநர்க்கும், பாணர்க்கும், கூத்தருக்கும், அந்தணர்க்கும் தடையின்றி திறந்துவிடப் பட்டது. அவர்கள் எந்த நேரத்திலும் தடையின்றிச் செல்ல வசதி அளிக்கப்பட்டது. இதனை,

பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்

ஆடையா வாயில் அவன் வருங்

கடைகுறுகி[16] (சிறு)

எனும் அடிகள் விளக்கும்.

நன்னன் பகைவரை வென்று அவரிடமிருந்து பெற்றபேரணிகலன்களை புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்கு வழங்கினான். முழை போல பொன்னை வாரி வழங்கினான் பருவம் பொய்யாத மேகம் போல மேன்மேலும் குறையாமல் வாரி வழங்கினான். இதனை மலைபடுகடாம்.

தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்

வீயாது சுரக்கும் அவள் நாள்மகிழ் இருக்கையும்[17] (மலைபடு)

என்றும் அடிகள் குறிப்பிடுகிறது.

முடிவுரை

ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பாட்டுத் தொன்மங்கள், கலைஞர்களின் பண்பாட்டுத் தொன்மங்கள் மூலம் அரசர்களின் விருந்தோம்பல் தன்மையையும், புலவர்களின் வாழ்க்கை முறையையும் அவர் களின் புலமையையும் அறிய முடிகிறது.

பெரும் மன்னர்கள் செல்வங்கள், நாடு உள்ளீட்டவற்றை வழங்கியதை காட்டிலும் குறுநில மன்னர்களான பேகன், பாரி, காரி, ஓரி ஆகியோர் ஊர்களின் வரிகளையும் அவற்றை ஆட்சி செய்யும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளதை அறிமுடிகிறது.

சங்க இலக்கிய சமூகத்தில் பெண் கலைஞர்களான பாடினி, விறலியர், போன்றார்களும் எளிதில் மன்னர்களை அணுகி பரிசில் பெற்றதை காணமுடிகிறது.

மேற்கோள்

1. பேராசிரியர் உரை.,பக்-231 செய்யுளியல், தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை
2. சுப்பிரமணியன் ச.வே., பக்கம் -74 பொருநராற்றுப்படை – சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் - அறிஞர் கமரிஷியல் அச்சுக்கூடம் - சென்னை.
3. சுப்பிரமணியன் ச.வே., பக்-102 பெருநராற்றுப்படை., சங்க இலக்கியம், பத்தப்பட்டு மூலமும் தெளிவுரையும்., பதிப்பாளர் கமரிஷியல் அச்சுக்கூடம் - சென்னை.
4. மேலது – 151 பக்கம்
5. மேலது – 166 பக்கம்
6. நச்சினார்க்கினியர் உரை., பக் 236-241., சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும், பதிப்பகம்-கேசரி அச்சுக்கூடம் சென்னை.
7. மேலது - 175-177 பக்கம்
8. சுப்பிரமணியன் ச.வே., ப.21., பெரும்பாணாற்றுப்படை - சங்க இலக்கியம் பத்துப்பட்டு மூலமும் தெளிவுரையும்
9. முனைவர் கமலா முருகன், ப - 61., பொருநராற்றுப்படை, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம் - சென்னை
10. நச்சினார்க்கினியர் உரை, ப-183., சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும்., பதிப்பகம் - கேசரி அச்சுக்கூடம் சென்னை.
11. நச்சினார்க்கினியர் உரை, ப - 187, சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும், பதிப்பகம்-கேசரி அச்சுக்கூடம் சென்னை.
12. சுப்பிரமணியன் ச.வே., ப.33., பெரும்பாணாற்றுப்படை-சங்க இலக்கியம் பத்துப்பட்டு மூலமும் தெளிவுரையும்
13. மேலது – பக்கம் 55
14. சுப்பிரமணியன் ச.வே., ப.81., மலைபடுகடாம் – சங்க இலக்கியம் பத்துப்பட்டு மூலமும் தெளிவுரையும்
15. நச்சினார்க்கினியர் உரை., ப - 187, சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும், பதிப்பகம் - கேசரி அச்சுக்கூடம் சென்னை.
16. மேலது - பக்கம்-96
17. சுப்பிரமணியன் ச.வே., ப.64., மலைபடுகடாம் – சங்க இலக்கியம் பத்துப்பட்டு மூலமும் தெளிவுரையும்